RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s741

# தமிழ் வளர்ச்சித் துறையில் பரிசுப் பெற்ற நூல்களில் சில - ஒரு பார்வை

ஜெ. ஜெயபிரியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002, தமிழ்நாடு, இந்தியா.

# Some of the Prize-Winning Books in the Field of Tamil Development - An Overview

J. Jayapriya [a, *]

[a] Department of Tamil, Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli-620002, Tamil Nadu, India

* Corresponding Author: src.jayapriya@gmail.com

Received: 01-12-2021
Revised: 27-04-2022
Accepted: 08-05-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

Tamil Nadu Government has established a separate department for the development of Tamil language in order to realize the dream of Bharathidasan to take Tamil language everywhere. Through it, the works of writers are selected and prizes are announced to the best creators for their works. Thus, the Tamil language is developing. It is also an organization to encourage creators. Few quality Tamil books are published. One or two of them are nominated for the prize. Some writers, according to their capability they have written the books but do not publish. To change this situation, this article aims to reduce the gap between authors and readers by bringing the excellence of prize-winning Tamil books and the creative activities of the Tamil development department to the reader.

**Keywords:** Tamil Development, Tamil Writers, Prize Winning Tamil Books, Authors

## முன்னுரை

மன்னர்கள், பெரும் புலவர்கள் சங்கம் வைத்து தமிழ் வளர்த்தனர். பழந்தமிழில் அனைத்து பொருளும் ஒன்றில் பொதிந்து சங்க இலக்கியங்களாகக் காணப்பட்டன. அப்பொக்கிஷங்கள் தமிழ் ஆர்வலர்கள் முயற்சியினால் ஏடுகளில் அரங்கேற்றப்பட்டன. கால வளர்ச்சி நிலையில் 2000 ஆண்டுகள் கடந்தும் எழுத்தாலும் பேச்சாலும் பயன்பட்டு வருகின்றது நம் செந்தமிழ். அப்பைந்தமிழ் மொழிக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் தமிழக அரசால் ஆக்கப் பெற்றதே தமிழ்வளர்ச்சித் துறை. அத்துறை மூலம் புதிய படைப்புகளை உருவாக்கவும் துறைதோறும் தீந்தமிழ் வளரவும் எழுத்தாளர்களின் வெளியீட்டாளர்களின் பல்துறை சிந்தனைகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ் வளாச்சித் துறை செயல்பட்டு வருகின்றது.

## தமிழ் வளர்ச்சித் துறைத் தோற்றம்

பாவலர்களாலும் சான்றோர்களாலும் ‘எங்கும் தமிழ் எதிலும் தமிழ் சங்கே முழங்கு’(பாரதிதாசன் கவிதைகள்) என எட்டுத்திக்கும் ஒலித்தது தமிழ். அம்முத்தமிழ் மென்மேலும் வளர்ந்திட எட்டுத்திக்கும் புகழ் மணக்கும் வகையில் தமிழக அரசால் தமிழ் வளர்ச்சித் துறை ஒன்று 1971 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. (தமிழ் வளர்ச்சித் துறை ta.m.wikipedia.org) இக்குழு தமிழகம் முழுவதும் உள்ள அலுவலகங்களை ஆய்வு செய்து தமிழில் அலுவல் நடத்த அறிவுரையும் ஆட்சி மொழித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்களைக் களைய அறிவுரையும் ஆட்சி சொல் அகராதியினை வளப்படுத்திடவும் 28.5.1971 அன்று அரசாணையின்படி இயங்கி வருகிறது. தமிழக அரசு ஏற்படுத்திய

இத்திட்டத்தினால் ஆண்டுதோறும் 31 வகைப்பாடுகளின் கீழ் தேர்வு செய்யப்படும் நூல்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. 2019 லிருந்து 33 வகைப்பாடுகளில் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் நிர்வாகத்தில் ஆட்சி மொழியின் பயன்பாட்டை விரிவாக்கவும் மேம்படுத்தவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள 1957 ஆம் ஆண்டில் ஆட்சி மொழிக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இக்குழு ஆற்றிய பணிகளை அடிப்படையாகக் கொண்டு 1968 ஆம் ஆண்டு தமிழ்வளர்ச்சி இயக்ககம் அமைக்கப்பட்டது. இது தமிழ் வளர்ச்சித் துறையின் கீழ் 1971இல் இணைக்கப்பட்டு தமிழ் வளர்ச்சித் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## தமிழ் வளர்ச்சித் துறையின் பணிகள்

தமிழ் என்றால் நாவல், சிறுகதை, கவிதை என்பது மட்டுமே என மக்கள் எண்ணுகிறார்கள். ஆனால் எழுத்தாளர்கள் அவரவர் கற்றத் துறையில் தன் முத்திரைப் பதிப்பித்திருக்கின்றனர். அதனை எங்கும் பறைசாற்ற தமிழ்நாடு அரசின் தமிழ்ச் சார்ந்த பணிகளைத் தமிழ் வளர்ச்சித் துறை சில இயக்கங்கள் வழி மேற்கொண்டு வருகின்றது. அவை, தமிழ் வளர்ச்சி இயக்ககம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக்கழகம், செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், அறிவியல் தமிழ் மன்றம், தலைமைச் செயலக மொழிப்பெயர்ப்புப் பிரிவு, உலகத் தமிழ்ச் சங்கம் என ஏழு அமைப்புகளின் கீழ் திறம்பட செயல்பட்டு வருகிறது. இத்துறையின் செயல்பாடுகளை செயலி வழியாகவும் 2019 ஆம் தொடங்கப்பட்டுள்ளது. Tamilvalarchithurai.com இணையம் வழியாகவும் தமிழ் வளர்ச்சித் தொடர்பான செய்திகளை அறிந்துக் கொள்ளலாம். ஆனால் இன்று ஒரு சில தகவல்கள் இணையத்தில் பதிவேற்றம் செய்யப் பெறவில்லை எனும் போது வருத்தத்தை அளிக்கின்றது. ஆட்சி மொழித் தமிழை நடைமுறைப் படுத்துவதும் தரமுள்ள நூல்களை வெளியிட நிதி உதவி வழங்குவதும் சிறந்த தமிழ் நூல்களுக்கு பரிசுகள் அளிப்பதுவும் திருவள்ளுவர் தினவிழா போன்ற அரசு விழாக்கள் நடத்துவதும் தமிழ் வளர்ச்சித் துறையின் பணியாகும்.

## பரிசுப் பெறும் துறைகள்

தமிழ் வளர்ச்சி நிலையினை பல சூழல்களின் நிலைகளிலே கணித்து அறியமுடியும். பல்த்துறையிலும் வளர்ந்த தமிழை மேலும் வளர்த்திட

1.மரபுக் கவிதை, 2.நாவல், 3.மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள், 4.மானிடவியல், சமூகவியல், பூகோளம், 5.பொருளியல், வணிகவியல், நிருவாக மேலாண்மை, 6.கணிதவியல், வானவியல், 7.பொறியியல், தொழில் நுட்பவியல், 8.மருத்துவம், உடலியல், உணவியல், ஆரோக்கியம், சுகாதாரம், 9.தத்துவம், சமயம், அளவியல், அறவியல், 10.சிறுகதை, 11.நாடகம், 12.கவின் கலைகள், (இசை, நடனம், ஓவியம்) 13.கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுயசரிதை, 14.தாவரவியல், விலங்கியல், உயிரியல், வானியல், 15.இயற்பியல் வேதியியல், 16.கல்வி, உளவியல், 17.வரலாறு, தொல் பொருளியல், 18.வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, கால்நடை மருத்துவம், 19.குழந்தை இலக்கியம், 20.சிறப்பு வெளியீடுகள், 21.அனைத்துத் தலைப்புகளின் கீழான மொழிப் பெயர்ப்பு நூல்கள், 22.திறனாய்வு நூல்கள், 23.பிறமொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள், 24.தமிழ் மருத்துவ நூல்கள் ஆயுர் வேதம், சித்த மருத்துவம் 25.அகராதி, கலைக்ககளஞ்சியம், கலைச்சொல்லாக்கம், ஆட்சித்தமிழ் 26.பயண நூல்கள் 27.அரசியல், சட்டவியல் 28.சுற்றுப்புறவியல், 29.கணிணியியல் 30.நாட்டுப்புறவியல் 31.விளையாட்டு2 32.தமிழர் வாழ்வியல் 33.மகளிர் இலக்கியம் என தமிழக அரசு துறைத்தோறும் தமிழ் சென்றடையும் நோக்கில் தமிழ்வழியில் நூல்கள் எழுதிய ஆசிரியர்களுக்கும் பதிப்பகத்தாருக்கும் பரிசு வழங்குகின்றது.

தமிழ் வளர்ச்சித் துறையின் தமிழ் வளர்ச்சிக்கான பரிசு பெற்ற நூல்களின் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் இணையத்திலும் பதிவேற்றம் செய்யப்படுகிறது. 1987 இல் பரிசுப் பெற்ற நூலாசிரியர்களுக்கு ரூபாய் 2000 பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் அளிக்கப்பட்டன. இது ஒவ்வொரு ஆண்டும்

பரிசுத் தொகை உயர்த்தப்பட்டும் வருகின்றது. அவ்வகையில் 2008 இல் 20000 ரூபாயும் 2009 இல் 20000 என்பது 30000 ரூபாயாகவும் பதிப்பகத்தாருக்கு 5000 இருந்து 1000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

## வி. கிருணமூர்த்தி

வாண்டுமாமா, விசாகன், சாந்தா மூர்த்தி என்ற புனைப் பெயர்களில் குழந்தைகளுக்கு அறிவுரை சிறுகதை எழுதி சிறுவர் இலக்கிய எழுத்தாளராகவும் கௌசிகன் என்ற பெயரில் பெரியவர்களுக்கும் தம் தமிழ் பணி ஆற்றி வந்தவர் வி. கிருணமூர்த்தி. பத்திரிகை துறையில் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியவர். ஆனந்த விகடன், சிவாஜி, கிண்கிணி, வானவில், கல்கி போன்ற பத்திரிகைகளில் பணியாற்றினார். கல்கி இவரது எழுத்திற்கு மகுடம் சேர்க்கும் விதமாக கோகுலம் என்ற பெயரில் பத்திரிகை வெளியிட்டது. 160க்கும் மேலான குழந்தை இலக்கியங்களை இயற்றியுள்ளார் (Krishnamurthy, 2002).

இவர் எழுதிய பல நூல்கள் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை விருதினைப் பெற்றுள்ளன. 'தோன்றியது எப்படி?', - 1976 ஆம் ஆண்டு சிறந்த குழந்தை வகைப்பாட்டில் முதல் பரிசு பெற்றது. 'மருத்துவம் பிறந்த கதை' 1977 ஆம் ஆண்டு சிறந்த குழந்தை வகைப்பாட்டில் முதல் பரிசு பெற்றது. 'நமது உடலின் மர்மங்கள்' - 1999 ஆம் ஆண்டு மருத்துவம், உடலியல், உணவியல், ஆரோக்கியம், சுகாதாரம் வகைப்பாட்டில் முதல் பரிசு பெற்றது. 'பெண்சக்தி' - 2005 பிற சிறப்பு வெளியீடுகள் வகைப்பாட்டில் பரிசு பெற்றது. 'பரவசமூட்டும் பறவைகள்' - 2006 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல், பிற சிறப்பு வெளியீடுகள் வகைப்பாட்டில் பரிசு பெற்றது. 'இயற்கை அற்புதங்கள்' - 2008 ஆம் ஆண்டுக்கான இயற்பியல், வானியல் வகைப்பாட்டில் பரிசு பெற்றது. அதனை கங்கை பதிப்பகம் வெளியிட்டது. 'அன்றும் இன்றும்' 2010 ஆம் ஆண்டுக்கான பொறியியல் தொழில் நுட்பம் வகைப்பாட்டில் பரிசு பெற்றது. அவரது படைப்புகள் எளிமையாக அழகான சித்திரங்களுடன் வெளி வருவதினால் குழந்தைகளை மிகவும் கவர்கின்றன.

## அ. அய்யாசாமி

முல்லைச்சரம், தாமரை, கல்கி, கணையாழி போன்ற இதழ்களில் பணியாற்றியவர் பேராசிரியர் அ. அய்யாசாமி. கதை, கவிதை, கட்டுரை எழுதும் ஆற்றல் பெற்றவர். இவரது எழுத்துப் பணிக்கு மெருகூட்டும் வகையில் 'வைக்கம் என்ற வரலாற்றுக் கவிதை நாடகத்திற்கு 2008 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினைப் பெற்றது. இது பெரியாரின் வைக்கம் போராட்ட நிகழ்வுகளை கவிதை வடிவில் வரலாற்று நாடகமாக வெளியிட்டுள்ளார். மற்றும் 'தென்னகத்தின் எழுச்சி - கட்டுரைத் தொகுப்பிற்கு மொழிப்பெயர்ப்பு வகைப்பாட்டில் பரிசு பெற்றார். இதில் திராவிட இயக்க வரலாற்றினைப் பதிவிட்டுள்ளார். மேலும் இவர் தமிழக அரசின் 2010 இல் திரு.வி. க விருதினையும் 2016 இல் தி.மு. க முரசொலி அறக்கட்டளையின் பெரியார் விருதினையும் பெற்றுள்ளார்.

## பெ. சேகர்

கராத்தே பயிற்றுனராக விளங்கும் பெ. சேகர் 'தேக்வாண்டோ கற்றுக் கொள்ளுங்கள்' எனும் நூலுக்குத் தமிழ் வளர்ச்சித் துறையால் 2005 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றார். இவர் 1987 ஆம் ஆண்டில் தேக்வாண்டோ போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர் ஆவார். தன் அனுபவத்தினையும் விளையாட்டு முறையினையும் நேர்த்தியுடன் வடித்துள்ளார்.

## நா. பார்த்தசாரதி

தீரன், அரவிந்தன், மணிவண்ணன், பொன்முடி, வளவன், கடலழகன், செங்குளம் வீரசிங்கக் கவிராயர், இளம்பூரணன் என்ற புனைப்பெயர்களில் அறியப்படும் நா. பார்த்தசாரதி தம் நாவல்களில் சமகால பிரச்சினைகளைச் சுட்டியும் அவற்றிற்காகப் போராடும் கதை மாந்தர்களையும் உருவாக்குபவர்.

சமூக போராட்டத்தை முன் வைக்கும் 'சாயங்கால மேகங்கள்' 1983 ஆம் ஆண்டிற்கான நாவல் வகைப்பாட்டில் தமிழ்நாடு அரசின் முதற்பரிசை நா. பார்த்தசாரதி அவர்கள் பெற்றார். அதில் சமுதாய மாற்றத்தைக் காண ஒவ்வொரு அத்தியாயங்களிலும் வீறுநடை வசனங்கள் காணப்படுகின்றன. 'அபாயங்களிலிருந்து விலகி ஒதுங்கி செல்வதை விட எதிர் கொண்டு ஒதுக்கி விடுவதுவே சிறந்த ஆண்மை' என்று 35 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடுகிறார் (Parthasarathy, 2020). இவ்விதம் பரிசு பெற்ற ஒவ்வொரு நூல்களும் ஒவ்வொரு தன்மையில் பயனுடையனவாக அமைந்திருக்கின்றன.

## சுப. சதாசிவம்

மருத்துவராக பணியாற்றி வரும் இவர் மூலிகை மருத்துகள், விஞ்ஞான நோக்கில் நோய் தீர்க்கும் மூலிகைகள் உட்பட 6 நூல்களை எழுதியிருக்கிறார். துpனமணி, தினமலர் உள்ளிட்ட வார மாத இதழ்களில் சித்த மருத்துவ கட்டுரைகளை எழுதியிருக்கிறார். சித்த மருத்துவச் சுடர் எனும் விருதினை பெற்ற இவர், 'அனுபோக வைத்திய திரட்டு' எனும் நூலுக்கு தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி துறையின் 2005 ஆம் ஆண்டுக்கான தமிழ் மருத்துவ வகைப்பாட்டில் பரிசினை பெற்றது. இந்நூலினை வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. அன்றாடம் பயன்படுத்தும் உணவுப் பொருட்களைக் கொண்டு மருத்துவக் குறிப்பினை மிக எளிமையுற பதிவிட்டுள்ளார்.

## ச.வே. சுப்பிரமணியன்

எழுத்தாளரும் தமிழஞரும் ஆகிய ச.வே. சுப்பிரமணியன் இலக்கிய ஈடுப்பாட்டின் காரணமாக இலக்கியக் கட்டுரைகள், இலக்கிய ஆய்வு நூல்கள், சிலப்பதிகார ஆய்வு நூல்கள், இலக்கண மொழி நூல் ஆய்வுகள் என பல நிலைகளில் 60 க்கும் மேற்பட்ட புத்தகங்களைத் தமிழ் மொழிக்கெனப் படைத்தளித்துள்ளார். அவற்றில் 2008 ஆம் ஆண்டுக்கான அகராதி, கலைச் சொல்லாக்கம், கலைக் களஞ்சியம் ஆட்சித் தமிழ் என்ற வகைப்பாட்டுப் பிரிவில் தமிழ் நிகண்டுகள் எனும் நூலுக்குத் தமிழ் வளர்ச்சித் துலை பரிசுக் கிடைத்தது (Subramanian, 2004).

## ஆய்வுப் பயன்

படைப்பாளர்களின் தன் கற்பனை, அனுபவம், கண்டுப்பிடிப்பு என்ற பல கோணங்களில் படைப்புகளை உருவாக்கி உள்ளனர். அவற்றில் சிறப்பானவற்றைத் தேர்ந்தெடுத்து பரிசுகள் வழங்கி சிறப்பிக்கும் தமிழநாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் பாராட்டத் தகுந்தவை ஆகும். உலகில் மற்ற நாடுகளின் வேகத்தோடு இணைந்து செல்ல இவ்வமைப்பின் மூலம் அறிவியல் முதலான துறைகளிலும் தமிழ் வளர வாய்ப்பாக அமைந்தது.

## முடிவுரை

தமிழ் படைப்புகளில் புதினம் கவிதை போன்றவற்றிற்குத் தரும் முதன்மையை பிறப் படைப்புகள் பெறுவதில்லை என்பது தமிழ் வள்ச்சித் துறை விருது பட்டியல் காணும் போது அறியமுடிகிறது. சில ஆண்டுகளில் சில துறைகளில் விருது போட்டிக்கான நூல்கள் ஒரு நூல் இரு நூல்கள் என்ற அளவிலே இருப்பதினால் போட்டியில் இடம்பெறவில்லை. இது அத்துறையில் வல்லண்மை பெற்ற ஒருவரும் விருது பெற முடியாத சூழ்நிலை உருவாகிறது. அந்நூல் தரமுடைய நூல் எனில் ஊக்கப் பரிசினைத் தரலாம் என இக்கட்டுரை வழி என் கருத்தினை முன் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் அத்துறை தமிழ் வழியில் வளர்வதற்கு ஒரு வாய்ப்பாகவும் அமைகிறது. பல்துறைகளைப் பற்றி அறியவும் முடிகிறது. துறைதோறும் நூல்களை சேர்ப்போம். தமிழ் மொழிக்கு மேலும் வளம் சேர்ப்போம்.

## References

Krishnamurthy, G., (2002) Meenavar Valviyal, Thirukkural Pathippagam, Chennai, India.

Parthasarathy, N., (2020) Saayangala megangal, Sri Senbaga Pathippagam, Chennai, India.

Subramanian, S.V., (2004) Paripadal Moolam Uraiyum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License